**மோட்டார் வாகன விபத்துக் கோரிக்கை தீர்ப்பாயம்/**

**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், செங்கல்பட்டு**

**முன்னிலை:- N. சுல்தான் ஆரிபீன்,** B.Sc., M.A., LL.M., Dip. in JJ & JP

**மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாயர்/**

**தலைமைக் குற்றவியல் நடுவர், செங்கல்பட்டு**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2057, விசுவாவசு வருடம் மாசி மாதம் 22 ஆம் நாள்

**IA.No.3/2026**
**in**
**MCOP.No.47/2024**
**(CNR.No.TNCG06-001391-2024)**

SBI ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்., … மனுதாரர்/
2ஆம் எதிர்மனுதாரர்

… எதிர் …

திருமுருகன், … எதிர்மனுதாரர்/மனுதாரர்

இம்மனு 19.01.2026 அன்று இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.B.ராம்நாத், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.K.சக்கரபாணி, மற்றும் திரு.J.டில்லிபாபு, ஆகியோர் ஆஜராகியும், 17.02.2026 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பு வாதுரைகளை கேட்டும், வழக்காவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும் …

**<u>உத்தரவு</u>**

எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பில் விபத்து இழப்பீடுக் கோரி தாக்கல் செய்த அசல் மனுவில், எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பு சாட்சியம் முடிவடைந்து, மனுதாரர்/2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், திருப்போரூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்களை குற்ற எண்.1738/2020 தொடர்பான விபத்து பதிவேடு, மாதிரி வரைபடம், மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள், இறுதியறிக்கை மற்றும் குற்ற வழக்கின் நிலை உள்ளிட்ட வழக்கு CD கோப்புகளை இவ்வழக்கில் முன்னிலைப்படுத்த அழைப்பாணை அனுப்ப உத்தரவிடக்கோரி இம்மனு உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 16 விதி 1 & 5 மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுதாரர்/2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பில் விபத்து இழப்பீடுக்கோரி 2024ஆம் ஆண்டு தாக்கல் செய்த அசல் மனுவில் எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பு சாட்சிகளின் விசாரணையானது 02.12.2025 அன்று முடிக்கப்பட்டு, வழக்கானது மனுதாரர்/2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்/2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில், விபத்து தொடர்பான குற்ற எண்.1738/2020 வழக்கின் விபத்து பதிவேடு, மாதிரி வரைபடம்,

மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள், இறுதியறிக்கை, குற்ற வழக்கின் நிலை ஆகியவற்றை வழக்கு CD கோப்புகளுடன் இவ்வழக்கில் முன்னிலைப்படுத்த திருப்போரூர் காவல் நிலைய ஆய்வாளருக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடக்கோரி இம்மனு உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 16 விதி 1, 5ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. மனுதாரர்/2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில், அசல் மனுவில் குறிப்பிடப்பட்டவாறு 25.09.2020 அன்று நடைபெற்ற விபத்திற்கு TN 59 BJ 8904 வாகனம் எவ்வகையிலும் பொறுப்பில்லை என்றும், அதனை நிரூபணம் செய்ய திருப்போரூர் காவல் ஆய்வாளர் குற்ற வழக்கின் கோப்புகளை இவ்வழக்கில் முன்னிலைப்படுத்த வேண்டியது மிகவும் அவசியம் என்றும், தவறும்பட்சத்தில் மனுதாரர்/2 ஆம் எதிர்மனுதாரருக்கு ஈடுகட்ட இயலா இழப்பு ஏற்படும் என்றும், தனது தரப்பு வழக்கினை நிரூபிக்க இயலாமல் போகும் என்றும், எனவே, வழக்கின் உண்மைத்தன்மையினைக் கண்டறிய திருப்போரூர் காவல் நிலைய குற்ற எண்.1738/2020 தொடர்பான விபத்து பதிவேடு, மாதிரி வரைபடம், மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள், இறுதியறிக்கை மற்றும் குற்ற வழக்கின் நிலை உள்ளிட்ட வழக்கு CD கோப்புகளை இவ்வழக்கில் முன்னிலைப்படுத்த திருப்போரூர், காவல் நிலைய ஆய்வாளருக்கு அழைப்பாணை அனுப்ப, மனுவை அனுமதித்து உத்தரவிட வேண்டியது அவசியம் என்பதாகக் குறிப்பிட்டு வாதிட்டார்.

4. எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பில் மனுவிற்கான எதிருரை இல்லை என்பதாக மேலெழுத்து செய்தபோதிலும், எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில், வழக்கில் மேற்கொண்டு கால நீட்டிப்பு செய்யும் நோக்கிலேயே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு குறிப்பிட்டு வாதிட்டார்.

5. **<u>தீர்வுக்குரிய பிரச்சனை</u>**:-

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

6. இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பது குறித்து ஆய்வு செய்கையில், விபத்து இழப்பீடுப் பரிகாரம் கோரி மனுதாரர் 2024 ஆம் ஆண்டு தாக்கல் செய்த அசல் மனுவில் எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பு சாட்சிகளின் விசாரணை முடிக்கப்பட்டு, மனுதாரர்/2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக பட்டியலிடப்பட்டு, வழக்கு விசாரணையானது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், விபத்திற்கு TN 59 BJ 8904 வாகனம் எவ்வகையிலும் பொறுப்பில்லை என்றும், அதனை நிரூபிக்க திருப்போரூர் காவல் நிலைய குற்ற எண்.1738/2020 தொடர்பான விபத்து பதிவேடு, மாதிரி வரைபடம், மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள், இறுதியறிக்கை மற்றும் குற்ற வழக்கின் நிலை உள்ளிட்ட வழக்கு CD கோப்புகளை இவ்வழக்கில் முன்னிலைப்படுத்த அழைப்பாணை திருப்போரூர், காவல் நிலைய

ஆய்வாளருக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பது குறித்து பரிசீலிக்கையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 16 விதி 1 ல், உரிமையியல் வழக்குகளில் எழு வினாக்கள் வனையப்பட்டதிலிருந்து 15 நாட்களுக்குள்ளாக தரப்பினர்கள் தங்கள் தரப்பில் சாட்சிகளாக யார் யாரை விசாரிக்கப்போகிறோம், யார் யாரிடமிருந்து ஆவணங்களை தாக்கல் செய்ய கோரப்போகிறோம், யார் யாரை அழைப்பாணை மூலம் சாட்சிகளாக விசாரணை செய்யப்போகிறோம் என்பதற்கான பட்டியலை வழக்கில் தாக்கல் செய்யவேண்டும் என்பதாக கீழ்கண்டவாறு குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளது.

**Order XVI - SUMMONING AND ATTENDANCE OF WITNESSES**

***Rule 1. List of witnesses and summons to witnesses:- (1) On or before such date as the Court may appoint, and not later than fifteen days after the date on which the issues are settled, the parties shall present in Court a list of witnesses whom they propose to call either to give evidence or to produce documents and obtain summonses to such persons for their attendance in Court.***

ஆனால், இவ்வழக்கில் அது போன்ற எந்த சாட்சி பட்டியலும் மனுதாரர்/2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படாத நிலையில், தற்சமயம் வழக்கானது எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பு சாட்சியம் நிறைவடைந்து, மனுதாரர்/2 ஆம் எதிர்மனுதாரரர் தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக வழக்கு இறுதி கட்டத்தை எட்டியுள்ள நிலையில், விபத்திற்கு TN 59 BJ 8904 வாகனம் எவ்வகையிலும் பொறுப்பில்லை என்று 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட வாதத்தினை நிரூபிக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் 2 ஆம் எதிர்மனுதாரருக்கு மட்டுமே உள்ளது. இந்நிலையில், அது குறித்து 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் எந்தவிதமான சாட்சிய சான்றாவணங்களும், முன்னிலைப்படுத்தாத நிலையில், மனுவில் கோரியுள்ள ஆவணங்களை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலிருந்து உரிய நகல் கோரும் மனுக்களை தாக்கல் செய்து பெறவும், விபத்து வழக்கு தொடர்பான கோப்புகள் தமிழ்நாடு காவல்துறையின் வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதை, உரிய கட்டணங்களை செலுத்தி தரவிறக்கம் செய்து பெறவும் 2 ஆம் எதிர்மனுதாரருக்கு வாய்ப்புகள் உள்ளது. அதுமட்டுமின்றி தகவலறியும் சட்டத்தின் கீழும் காவல்நிலையத்திலிருந்து நேரடியாக ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்கான வழிகளும் உள்ள நிலையில், மனுதாரர் தரப்பில் அதுபோன்ற எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாமல், நேரடியாக வழக்கானது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், மேற்படி ஆவணங்களை காவல் ஆய்வாளர் மூலம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த அழைப்பாணை

வழங்கக்கோரி தாக்கல் செய்துள்ள இம்மனுவானது, அசல் மனு மீதான விசாரணையில் மேற்கொண்டு காலநீட்டிப்பு செய்யும் நோக்கிலேயே தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

8. விபத்தானது மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு நடைபெறவில்லை என்பதாக மனுதாரர்/2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறிப்பிட்டுள்ள நிலையில், அதனை நிரூபிக்க வேண்டிய பொறுப்பும் கடமையும், மனுதாரர்/2 ஆம் எதிர்மனுதாரருக்கு மட்டுமே உள்ள நிலையில், உரிய ஆவணங்கள் எதுவும் அசல் மனுவில் தாக்கல் செய்த பதிலுரையுடன் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளோ, மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை தகுந்த அலுவலகங்களிலிருந்து நகல் கோரும் மனுக்களை தாக்கல் செய்தோ, வலைதளத்திலிருந்து தரவிறக்கம் செய்தோ வழக்கில் முன்னிலைப்படுத்த வழிகள் உள்ள நிலையில், அது போன்ற எந்த நடவடிக்கைளும் மேற்கொள்ளாமல், நீதிமன்றத்தின் மூலமாக சாட்சியங்களை சேகரம் செய்ய முயல்வதானது எவ்வகையிலும் ஏற்புடையதல்ல என்பதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9. நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படும் வாதங்களை நிரூபிக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் அந்தந்த தரப்பினர்களுக்கு மட்டுமே உள்ளதாக இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 108 ல் குறிப்பிட்டு கூறப்பட்டுள்ள நிலையில், அதற்கு மாற்றமாக நீதிமன்றத்தின் மூலமாக சான்றுகளை சேகரம் செய்யும் நோக்கில் காவல்

ஆய்வாளரை உரிய சான்றாவணங்களை முன்னிலைப்படுத்துமாறு கோரி தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிக்க எவ்விதமான முகாந்திரமுமில்லை என்றும், வழக்கானது 2024 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டு, இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், வழக்கினை மேற்கொண்டு கால நீட்டிப்பு செய்யும் நோக்கிலேயே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட வாதத்தில் அதிகப்படியான உண்மைகள் இருக்க வாய்ப்புகள் உள்ளதாகவும் இந்நீதிமன்றம் கருதுவதால், இம்மனுவினை அனுமதிக்க எவ்விதமான முகாந்திரமுமில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

10. மேற்கண்ட சாராம்சங்களின் அடிப்படையில், சாட்சிகள் பட்டியலில் குறிப்பிடப்படாத நபரை வழக்கில் மனுதாரர்/2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியமளிக்க அழைப்பாணை அனுப்பக்கோருவதற்கான தகுந்த காரணம் எதுவும் மனுதாரர்/2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தாத நிலையில் இம்மனுவை அனுமதிக்க எவ்விதமான முகாந்திரமுமில்லை என்றும், இம்மனுவானது 2024 ஆம் ஆண்டு முதல் நிலுவையிலிருக்கும் இவ்வழக்கினை மேற்கொண்டு காலதாமதப்படுத்தும் நோக்கிலேயே தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் இந்நீதிமன்றம் தீர்மானிப்பதால் மனுவை அனுமதிக்க எவ்விதமான முகாந்திரமும் சட்டப்படியும் பொருண்மைப்படியுமில்லை என்றும்,

அதனடிப்படையில் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடுவதே சரியானதாக இருக்கும் என தீர்மானித்து இப்பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.

11. முடிவில், இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்ல, சொல்ல அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N.SULTAN ARIBEEN

Chief Judicial Magistrate, Chengalpattu
Digitally signed by N.SULTAN ARIBEEN
Location: Chengalpattu
Date: 2026.03.06 16:27:33 +0530

தலைமைக் குற்றவியல் நடுவர்,
செங்கல்பட்டு

**<u>இருதரப்பிலும் சாட்சிகள், சான்றாவணங்கள்</u>**:-இல்லை

N.SULTAN ARIBEEN

Chief Judicial Magistrate, Chengalpattu
Digitally signed by N.SULTAN ARIBEEN
Location: Chengalpattu
Date: 2026.03.06 16:27:40 +0530

தலைமைக் குற்றவியல் நடுவர்,
செங்கல்பட்டு

Draft/Fair Order

**IA No.3/2026**

**in**

**MCOP.No.47/2024**

**Dt.06.03.2026**

MACT/Chief Judicial
Magistrate, Chengalpattu.